දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832

ලේකම් / செயலாளர் / Secretary } 2784811

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50
Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/03/53/02/15/II

දිනය / திகதி / Date } 2017 .09.20

சுற்றறிக்கை இல 37/2017

மாகாண பிரதம செயலாளர்கள்
மாகாண கல்வி செயலாளர்கள்
மாகாண கல்வி பணிப்பாளர்கள்
வலயக் கல்வி பணிப்பாளர்கள்
13 வருட உத்தரவாதப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்ட முன்னொடி செயற்றிட்டத்தின் முதலாவது கட்டத்துக்குரிய பாடசாலை அதிபர்கள்

### 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம்
### 12, 13 தரங்களுக்கான தொழின்முறை கல்வி துறைப்பிரிவினை அறிமுகப்படுத்தல்

எல்லா பாடசாலை பிள்ளைகளுக்கும் முதலாம் தரம் தொடக்கம் பதின்மூன்றாம் தரம் வரைக்கும் தொடர்த்தேர்ச்சியான பாடசாலைக் கல்வியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் கல்வி அமைச்சினால் "13 வருட உத்தரவாதப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுகக்கும் சித்தியடைந்தமை மற்றும் சித்தியடையாமை குறித்து கவனத்திற் கொள்ளாது உள்வாங்கப்படும் சந்தர்ப்பம் வழங்கும், எதிர் கால சவால்களை வெற்றி கொள்ள தொழில்முறைக் கல்வியினை பெற்றுத்தரும் நோக்கில், புதிய தொழின்முறை பாடங்கள் 26யினை உள்ளடக்கிய பாடத்துறைப்பிரிவினை அறிமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்துக்காக 43 பாடசாலைகள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) தெரிவு செய்யப்பட்டு, அவற்றில் 2017 அக்டோபர் மாதம் தொடக்கம் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி க.பொ.த உயர்தர பாடத்துறை பிரிவுகளுக்குரித்தானதாக விநியோகிக்கப்பட்ட இல 2016-13 சுற்றுநிருபத்தில் குறிக்கப்பட்ட பாடத்துறைப்பிரிவுகள் ஆறுக்கு மேலதிகமாக 12,13 தரங்களுக்காக இந்த ஏழாவது பாடத்துறைப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

02. இந்த பாடத்துறைப் பிரிவு கீழ்க்காணும் வாறாக காட்டப்பட்ட மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டிருக்கும்.

i. பொது பாடத் துறை
ii. பிரயோக விடயத் துறை
iii. நிறுவனஞ்சார் தொழிற்பயிற்சி

2.1 இந்த பாடத்துறைப்பிரிவுக்கு உள்வாங்கப்படம் மாணவர்கள் 12ம் தரத்தில் முதலாம் தரத்தில் (2017 அக்டோபர் மாதம் தொடக்கம் 2018 மார்ச் மாதம் வரை) கீழ்க் காணும் பொது பாடத்துறையை கட்டாயமாக தொடர வேண்டும்.

| பொது பாடத்துறை | அலகு எண்ணிக்கை | மணித்தியால அளவு |
|---|---|---|
| i. முதலாம் மொழி (சிங்களம் அல்லது தமிழ்) | 10 | 40 |
| ii. பிரயோக ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன் | 10 | 60 |
| iii. அழகியல் நயப்பு | 04 | 40 |
| iv. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் திறன் | 07 | 60 |
| v. பிரஜைத்துவத்துக்கான திறன் | 08 | 40 |
| vi. சமூக நன்நிலவுகைக்கு தேவையான சுகாதார மற்றும் வாழ்க்கைத் திறன்கள் | 07 | 40 |
| vii. முயற்சியாண்மை திறன் | 06 | 40 |
| viii. விளையாட்டு மற்றும் ஏனைய பாட இணை செயற்பாடுகள் | - | 30 |
| ix. தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம் | - | 60 |

2.2 தரம் 12யின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளுக்காக கீழக்காணும் பிரயோக பாடங்களில் மூன்றினை மாணவர்கள் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அதன் போது அறிமுகப்படுத்தப்பட்ட மொடியூல் (Introductory Module) 12ம் தரத்தின் இரண்டாம் தவணையில் (2018 மே-ஜூலை) இடைநிலை மொடியூலில் (Intermediate Module) 12ம் தரத்தின் மூன்றாம் தவணையில் (2018 செப்டெம்பர் -டிசெம்பர்) நடைமுறைப்படுத்தப்படும். ஒரு பாடசாலைத் தவணையில் பாடமொன்றுக்கு 100 மணித்தியாலப்படி மூன்று பாடத்துக்கு 300 மணித்தியாலயம் ஒதுக்கப்பட்டுள்ளது.

i. பிள்ளை உளவியல் மற்றும் நலன் பேணல்
ii. சுகாதாரம் மற்றும் சமூக நலன்பேணல்
iii. உடற்கல்வி மற்றும் விளையாட்டு
iv. அரங்காற்றல் கலைகள்
v. நிகழ்ச்சி முகாமைத்துவம்
vi. கலையும் கைப்பணியும்
vii. உள்ளக வடிவமைப்பு
viii. புதுப்பாணி வடிவமைப்பு
ix. கிரபிக் வடிவமைப்பு
x. கலையும் வடிவமைப்பும்
xi. நிலத்தோற்ற வடிவமைப்பு
xii. பிரயோக தோட்டக்கலை கற்கைகள்
xiii. கால்நடை உற்பத்தி தொழிநுட்பக் கற்கைகள்
xiv. உணவுத் தயாரிப்பு தொழிநுட்பக் கற்கைகள்
xv. நீரியல் வள தொழிநுட்ப கற்கைகள்
xvi. பெருந்தோட்ட உற்பத்தி தொழிநுட்ப கற்கைகள்
xvii. நிர்மாண தொழிநுட்பம்
xviii. தானியங்கி யந்திர தொழிநுட்ப கற்கைகள்
xix. மின் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்ப கற்கைகள்
xx. புடவை மற்றும் ஆடைத் தொழிநுட்ப கற்கைகள்
xxi. உலோக நிர்மாண தொழிநுட்ப கற்கைகள்
xxii. அலுமினிய கட்டுமான தொழிநுட்ப கற்கைகள்
xxiii. மென்பொருள் விருத்தி
xxiv. இணைத்தள வடிவமைப்பு
xxv. உல்லாச பயணம் மற்றும் விருந்தோம்பல்
xxvi. சுற்றாடல் கற்கைகள்

2.3 12ம் தரத்தில் தெரிவு செய்த பிரயோக பாடங்கள் மூன்றில் ஒரு பாடத்துக்கு மட்டும் 13ம் தரத்தில் கற்கையைத் தொடர வேண்டும். அப்பாடம் பாடசாலையில் கற்பிக்கப்பட வேண்டிய மணித்தியாலய எண்ணிக்கை , தொழின்முறை பயிற்சி பெற்றுக்கொள்ளும் மணித்தியாலய எண்ணிக்கை மற்றும் அனுப்பப்பட வேண்டிய நிறுவனம், மதிப்பீட்டு முறை மற்றும் அதற்காக வழங்கப்படும் சான்றிதழ் தொடர்பாக காலக்கிரமத்தில் விபரமாக அறியத்தரப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2.4 இந்த பாடத்துறைப் பிரிவை கற்பிப்பதற்காக பொதுவான முறையில் 40 நிமிட மட்டுப்பட்ட கால அட்டவணையை ஒதுக்கிக்கொள்ள அவசியமில்லை என்றாலும் பாடசாலையிலுள்ள வசதிகள் மற்றும் ஆசிரியர்களை பயன்படுத்திக்கொண்டு முழுமையான பாடத்திட்டத்தை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியை தழுவக்கூடியதாக நெகிழ்வுடைய கால அட்டவணையை ஆக்கிக்கொள்வது அதிபரின் பொறுப்பாண்மையாகும்.

03. தொழின்முறை பாடத்துறைப் பிரிவினை நடைமுறைப்படத்தவதற்கு நிதி ஒதுக்கீடு

தொழின்முறை பாடத்துறைப் பிரிவினை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னோடி செயற்றிட்டத்தின் முதலாவது கட்டத்துக்கான தெரிவு செய்யப்பட்ட தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்காக கல்வி அமைச்சினால் ஒரு பாடசாலைக்கு நியம அடிப்படை தராதர தேர்வளவின் படி ஒரு தடவைக்கு ருபாய் 2 மில்லியன்கள் வரையாகும் வண்ணம் தேவையின் அடிப்படையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நிதிக்கொடையாக வழங்கப்படும். அந்நிதியினைப் பயன்படுத்தல் தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்புசார், அளவுசார், மற்றும் கட்டமைப்புசார் அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் கொள்ளல் தொடர்பான இல 07/2013 கொண்ட சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் நூலுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இந்த நிதிக்கொடையை செலவிடும் காலப்பகுதி, அனுமதியை பெற்றுக்கொள்ளல் மற்றும் கண்காணிப்பு தொடர்பாக தேவையான அறிவுறுத்தல்கள் நிதிக்கொடையை விடுவிக்கும் பொது விடுக்கப்படும்.

3.1 நிதிக் கொடையை பயன்படுத்த வேண்டிய புலங்கள்

முன்னோடி செயற்றிட்டத்தின் முதலாவது கட்டத்தில் பாடசாலைகளில் தொழின்முறை பாடத்துறைப்பிரிவை ஆரம்பித்தல், அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த தேவையான பௌதிக மற்றும் மானுட வளங்களை விருத்தி செய்வதற்கும் வழங்குவதற்காகவும் கீழ்க்காணும் வாறாக நிதிக்கொடையை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

i. வகுப்பறை , விஞ்ஞான கூடம், வேலைக்கூடம், தொழிநுட்ப விஞ்ஞான கூடம் வசதிகளை மேம்படத்தல்
ii. உரிய பாடத்துக்காக பாடசாலை நூலக புத்தங்கள் மற்றும் பொருட்களை விலைக்கு வாங்குதல்
iii. உதவி கற்றல் பொருள் , செயன்முறை பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் விலைக்கு வாங்கதல்
iv. பாடத்திட்டத்தை அமுல்படுத்தவதற்கு தேவையான செயன்முறையை, பயிற்சி வாய்ப்புகளை, ஆலோசனை சேவையை , பாட புற மற்றும் பாட இணை செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
v. கைத்தொழில் மற்றும் தொழின்முறை பயிற்சி பெற்றுக்கொள்வதற்காக தேவையான செலவுகள் (உதாரணம் : போக்குவரத்துச் செலவு)
vi. கணணி மற்றும் பிற உபகரணங்கள் பராமரிப்பு, மின் கட்டணம் மற்றும் இணையத்தள கட்டணக் கொடுப்பனவு.
vii. மாணவர் அடிப்படையான கொடுப்பனவை தொழின்முறை பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு வழங்கதல்.

முன்னோடி செயற்றிட்டத்தின் வருங்கால படிமுறைகள் தொடர்பான விரிவான தகவல்கள் காலக்கிரமத்தில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னோடி அடிப்படையில் செயற்படுத்தப்படுவதால் எதிர்காலத்தில் பொருத்தமான வகையில் இந்த அறிவுறுத்தல்கள் மாற்றத்துக்குட்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சுனில் ஹெட்டிஆராச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்:

1. செயலாளர், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு
2. கணக்காயவாளர், கணக்காய்வாளர் திணைக்களம்
3. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
4. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத திணைக்களம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்